

# 1 பாடி ஆடி விளையாடலாம்





1st_std_Tamil_Term_I.indd 2 05/02/2022 16:21:19

# காட்டுக்குள்ளே கொண்டாட்டம்



பிடித்த விளையாட்டுகள் குறித்துப் பேசி மகிழ்வோம்



1st_std_Tamil_Term_I.indd 3 05/02/2022 16:21:20

# ஆலமரத்துல விளையாட்டு



ஆலமரத்துல விளையாட்டு
அணிலே அணிலே கைதட்டு

குக்கூ குக்கூ குயில்பாட்டு
கொஞ்சும் கிளியே தலையாட்டு

குட்டிக்குரங்கே வாலாட்டு
குள்ள நரியே தாலாட்டு

சின்ன முயலே மேளங்கொட்டு
சிங்கக்குட்டியே தாளந்தட்டு

எல்லாருந்தான் ஆடிக்கிட்டு
ஏலேலேலோ பாடிக்கிட்டு


ஒன்றாகத்தான் சேர்ந்துகிட்டு
ஓடிவாங்க துள்ளிக்கிட்டு



1st_std_Tamil_Term_I.indd 4 05/02/2022 16:21:21

## இலையும்... காயும்...

படத்தைப் பார்த்துக் கதை கூறி மகிழ்வோம்



# விளையாடலாம் வாங்க



இடிக்காமல் நடப்போம்

இடுப்பில் கை வைத்தபடி ஒருவரோடு
ஒருவர் இடிக்காமல் நடப்போம்



உள்ளே! வெளியே!

வட்டத்தில் நின்று ஆசிரியர் கூறுவதற்கு ஏற்ப
வட்டத்தின் உள்ளே/ வெளியே குதிப்போம்




நடிப்போம் நடிப்போம்

விரும்பியபடி மாறி
நடித்துக்காட்டுவோம்

## கை வீசம்மா கைவீசு!

கை வீசம்மா கைவீசு

பள்ளிக்குப் போகலாம் கைவீசு

பாடம் படிக்கலாம் கைவீசு

கணிப்பொறி கற்கலாம் கைவீசு

கவிஞர் ஆகலாம் கைவீசு

அறிவியலை அறியலாம் கைவீசு

அறிஞர் ஆகலாம் கைவீசு

அறிவை வளர்க்கலாம் கைவீசு

அன்பாய் வாழலாம் கைவீசு

விளையாடப் போகலாம் கைவீசு

வெற்றி பெறலாம் கைவீசு

கை வீசம்மா கைவீசு





1st_std_Tamil_Term_I.indd 7 05/02/2022 16:21:38

# நானும் வருவேன்




சின்னுவுக்குத் தெரியும். உங்களுக்குத் தெரியுமா?

வகுப்பறையில் முறைப்படி நடைபெறும் அன்றாடச் செயல்பாடுகள் குறித்துக் கலந்துரையாடுவோம்